

அண்ணா அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைமுன், "கலைஞர் ஞாபகங்கள்" பாடல் வெளியீட்டு விழா, நேற்று (27.9.2023) துறைமுகம் காஜா தலைமையில் நடைபெற்றது. மா.ப. அன்புதுரை வரவேற்றார். அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை ஆகியோர் பாடலை வெளியிட்டனர். எஸ்.பூச்சி முருகன், கு.க.செல்வம், சூர்யா வெற்றிகொண்டான், கலை கதிரவன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பாடலாசிரியர் ஈரோடு இறைவன் 'இசையமைத்த எஸ்.எச்.அப்துல்காதர்' பாடிய நெடுவாசல் செந்தில் தாஸ் ஆகியோரை கழக முன்னணியினர் பாராட்டினர். இந்நிகழ்வில் தாயகம் கவி எம்.எல்.ஏ., நிவேதா முருகன், சு.சதீஷ், ஆயிரம் விளக்கு தவமணி, குறிஞ்சி என்.சிவக்குமார், சு.சதீஷ், பொன்னேரி சிவா, ராமன், ராபர்ட் நாகம்மை கருப்பையா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### கழக சட்டத்துறை சார்பில் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில்

# சென்னை மண்டல சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கிறார்!

சென்னை, செப். 28-

தி.மு.க. சட்டத்துறை சார்பில் நடைபெற உள்ள சென்னை மண்டல சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கவுள்ளார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் வரும் 30.09.2023 (சனிக்கிழமை) காலை 9.00 மணி அளவில் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி ஆடிட்டோரியத்தில் நடைபெறவுள்ள சென்னை மண்டல சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கவுள்ளார்.

இதுகுறித்து மேற்கொண்டு தகவல்கள் பெற விரும்புவோர் சட்டத்துறை தலைமையால் அறிவிக்கப்பட்டுள்ள பேச்சு போட்டிக்கான ஒருங்கிணைப்பாளர்களை தொடர்புகொண்டு அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்!**

கே.எஸ்.இரவிச்சந்திரன் 9840022250 (சட்டத்துறை இணைச் செயலாளர்)

ஜெ.பச்சையப்பன் 9840260178 (சட்டத்துறை துணைச் செயலாளர்)

கே.சந்துரு 9444006999 (சட்டத்துறை துணைச் செயலாளர்)

கே.ஜே.சரவணன் 9841057345 (தலைமைக் கழக வழக்கறிஞர்)

**பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளும் கல்லூரிகள்!**

1) அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு

2) அரசு டாக்டர்.அம்பேத்கர் சட்டக் கல்லூரி, பட்டறைப் பெரும்புதூர், திருவள்ளூர் மாவட்டம்.

3) பி.எஸ்.அப்துர் ரஹ்மான் பல்கலைக் கழகம், சென்னை

4) சவிதா பல்கலைக் கழகம், சென்னை

5) வேல் டெக் ரங்கராஜன் டாக்டர்.சகுந்தலா ஆர் & டி இன்ஸ்ட்டியூட் ஆப் சயின்ஸ் & டெக்னாலஜி, சென்னை

6) விநாயகா மிஷன்ஸ் ரிசர்ச் பவுண்டேசன், காஞ்சிபுரம்

7) சாய் பல்கலைக்கழகம், சென்னை,

8) டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை.

9) பிரிஸ்ட் பல்கலைக்கழகம், புதுச்சேரி வளாகம், புதுச்சேரி

மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அந்தந்த கல்லூரி முதல்வர்களை தொடர்புகொண்டு பேச்சுப் போட்டியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி மாணவர்களை பங்கு பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

**இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப்போட்டி!**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் வருகிற 01.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 09.00 மணி அளவில் செங்கல்பட்டு திருக்கழுக்குன்றம் சாலையில் உள்ள சிவகார்த்திக் ஏ/சி ஹாலில் நடைபெறும் இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப் போட்டியை கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கவுள்ளார்.

மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அந்தந்த மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கத்தை தொடர்புகொண்டு 3 வருடத்திற்கு உட்பட்ட இளம் வழக்கறிஞர்களை இப்போட்டியில் பங்குபெறச் செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தகவல்களுக்கு: என். கனகராஜ் 9443114734 (காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அமைப்பாளர்)

இவ்வாறு கழக சட்டத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேனி வடக்கு மாவட்ட மாணவர் அணி கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் டி.ஸ்டீபன் வேண்டுகோள்!

தேனி, செப். 28 -

தேனி வடக்கு மாவட்டம் தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன் வேண்டுகோள் வருமாறு:-

தேனி வடக்கு மாவட்டம் ஒன்றியம், நகரம், பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் நாளை (29.09.2023 - வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணி அளவில் என்.ஆர்.டி. மண்டபம் அருகே தேனி மாவட்டம் கழக அலுவலகத்தில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் அதலை செந்தில் குமார், கோகுல், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், தேனி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன் ஆகியோர் தலைமையிலும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் தங்க பாண்டியன், நிபந்தன் ராதா கிருஷ்ணன், சுதந்திரம், சபீதா பானு ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

அதுசமயம் ஒன்றியம் நகரம் பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்களுக்கு விண்ணப்பித்தவர்கள் இதில் கலந்து கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் வயதை சரிபார்க்க கல்வி சான்றிதழ் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை, கட்சி உறுப்பினர் அட்டை கழகத்தில் இதற்கு முன் பணியாற்றிய ஆவணங்களை கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் டி.ஸ்டீபன் அறிக்கை விடுத்துள்ளார்



தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பாக தேனி நகரக் கழக அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் கடந்த 17ஆம் தேதி வேலூரில் நடைபெற்ற மாநில இளைஞரணிச் செயலாளர் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மான அடிப்படையில் தேனி நகர் கழக அலுவலகத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் சரவணகுமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ராஜா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடி லட்சுமணன், வடக்குமாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அஜிப் கான் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், பரணிஸ்வரன், ஜெயக்குமார், தெய்வேந்திரன், முத்து ராம்ஜி, நகரக் கழகச் செயலாளர் நாராயண பாண்டியன், இளைஞர்அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### 30-ஆம் தேதிக்குள்

# சொத்துவரியை செலுத்திட வேண்டும்!

## சென்னை மாநகராட்சி தகவல்!

சென்னை,செப்.28-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சொத்து உரிமையாளர்களும், வணிகர்களும், சொத்துவரி மற்றும் தொழில் வரியினை 30.09.2023க்குள் செலுத்திட வேண்டும்.

சொத்து உரிமையாளர்கள் மற்றும் வணிகர்களின் நலன் கருதி, 28.09.2023 (மிலாடி நபி) மற்றும் 30.09.2023 (சனிக்கிழமை) ஆகிய அரசு விடுமுறை நாட்களில் ரிப்பன் கட்டடத்திலுள்ள வருவாய்த்துறை தலைமையிடம், மண்டலங்களில் உள்ள வருவாய்த்துறையில் சொத்துவரி மற்றும் தொழில்வரி வசூல் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. சொத்துவரி மற்றும் தொழில்வரியினை 30.09.2023க்குள் செலுத்தப்படவில்லையெனில் விதிகளின்படி, 01.10.2023 முதல் அபராத வட்டித் தொகை விதிக்கப்படும். எனவே, சொத்து உரிமையாளர்கள் மற்றும் வணிகர்கள் 30.09.2023க்குள் சொத்து மற்றும் தொழில்வரியினை இணையதளத்திலும், தலைமையகத்திலும் மற்றும் மண்டல அலுவலகங்களிலும் செலுத்தி பயன்பெறுமாறும், பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிக்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### தாமரை பாரதி – சிவராஜ் கருத்துரை வழங்கினர்!

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் கழக முப்பெரும் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! இரா.ஆவுடையப்பன் சிறப்புரை!

நெல்லை.செப்.28-

நெல்லை கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் இராதாபுரம் தொகுதி பார்வையாளர் தாமரை பாரதி, மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் அம்பாசமுத்திரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பாகமுகவர்கள் சரிபார்ப்பு சம்பந்தமாக கருத்துக்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணையை ஏற்று கழக முப்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்து கழக நிர்வாகி களிடம் கருத்துக்களை கேட்டு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி. பிரபாகரன், எஸ்.ஏ.கே.சித்திக், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணைச் செயலாளர்கள் நம்பி, மைக்கேல், தமயந்தி, மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் கணேசன், அபூபக்கர், எட்வின் வளன்அரசு, சாந்தி, கனகராஜ், பரமசிவம் ஐயப்பன்,

ஒன்றியச் செயலாளர்கள் பரணி ஆர்.சேகர், முத்துப் பாண்டி என்ற பிரபு, முத்து கிருஷ்ணன், சுடலைக் கண்ணு, ராஜன், செல்வ கருணாநிதி, சேவியர் ராஜா, முருகன், கணேசன், நகர செயலாளர் கணேசன், சுப்பிரமணியன் என்ற மணிசூரியன், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வானுவாமலை, அயூப்கான், முருகையா பாண்டியன், கசமுத்து, தமிழ்வாணன், ஜான்கென்னடி, வானுவாமலை, மணிகண்டன், மணிஷா செல்வராஜ், சுப்பையா, முத்து கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

"திராவிட மாடல்"ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்மாதிரியாக தமிழ்நாட்டை மாற்றி தன்னுடைய உழைப்பின் காரணமாக கடந்த 2 ஆண்டுகள் 5 மாதங்களில் தமிழகத்தில் ஏழை, எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மக்கள் அனைவரும் தினந்தோறும் நாளும் ஒரு திட்டங்களைப் பெற்று பயனடைந்து வருகிறார்கள். தலைவர் அவர்களுடைய ஆட்சியினை தங்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற ஆட்சி என போற்றி மகிழ்கிறார்கள். எண்ணற்ற திட்டங்களை தந்து மக்களை நாளும் காத்து வருகின்ற முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் தான் ஆட்சி செய்த போது ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், மகளிர், முதியோர், பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர், இளைஞர்களுக்கு நாளும் நலத்திட்டங்களை தந்து ஆட்சி செய்து வந்த நமது தலைவர் செம்மொழி காவலர் என்றும் கலைஞர் என போற்றப்பட்ட தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம், கருத்தரங்கம், கவிதை போட்டி, கண்காட்சிகள் நடத்தியும், முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியில் நலத்திட்டங்களை துண்டு பிரசுரம் மூலம் பிரச்சாரம் செய்திடவேண்டும். இந்நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதியில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்று கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் என்று சொல்வதை செய்வோம்! செய்வதை சொல்வோம்! என்ற கலைஞர் வழி நின்று கலைஞர் அவர்களால் உழைப்பு!உழைப்பு! உழைப்பு! என பாராட்டப்பட்ட திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தை துவக்கி வைத்தார்கள். இதன் மூலம் 1 கோடியே 6 லட்சத்து 50,000 ம் மகளிர் பயன்பெற்றுள்ளனர்.

மேலும் தகுந்த காரணம் இன்றி நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்றும் அதனை கனிவுடன் பரிசீலனை செய்து தகுதியுள்ள அனைத்து மகளிர் அனைவருக்கும் உரிமை தொகை கிடைக்கும் என்று அறிவித்ததை மகளிர்கள் தங்களுக்கான ஆட்சி என தலைவரை புகழ்ந்து போற்றி மகிழ்கிறார்கள். சிறப்பு மிக்க திட்டத்தை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்களுடைய உழைப்பால் தமிழ்நாட்டில் பலதரப்பட்ட மக்கள் தினமும் ஒரு நலத்திட்டங்களை பெற்று வருகிறார்கள். கழகயினை தமக்கான ஆட்சி என போற்றி மகிழ்கிறார்கள்.

மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்மாதிரியாக மகளிர்க்கு கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட திட்டங்களை தந்து தமிழகத்தை இந்தியாவின் நம்பர் 1 மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்களுடைய உழைப்பினால் தொழில் துறையில் முதன்மை, பொருளாதார ரீதியாக அதிவேக முன்னேற்றம், கல்வி இந்தியாவில் முதன்மை என தமிழ்நாட்டின் முன்னேற்றம் இருந்து வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியே மக்களின் வளர்ச்சி தனது தமிழ்நாட்டின் வளர்ச்சியும், மக்களின் வளர்ச்சியுமே, தன்னுடைய மகிழ்ச்சி என எண்ணி உழைத்து வருகின்ற நம் தலைவர் தளபதியார் அவர்கள் உழைப்பால் தேர்தல் அறிக்கை கூறிய வாக்குறுதிகளில் 90 சதவீதம் நிறைவேற்றியுள்ளார். அவர்கள் இரவு, பகல், பாராது கண் துஞ்சாது உழைப்பினால் தமிழக மக்கள் அனைவரும், முதலமைச்சர் அவர்களை எண்ணி போற்றி புகழ்கிறார்கள். மற்ற மாநிலத்தில் உள்ள மக்கள் எல்லாம் நமக்கு இது போன்ற முதலமைச்சர் கிடைக்கமாட்டாரா என ஏங்கி தவிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகின்ற மக்கள் நலத்திட்டங்களை பார்த்து மற்ற மாநிலங்களும் தங்கள் மாநிலங்களில் நிறைவேற்றுவதற்காக முயன்று வருகிறார்கள். இது போன்று மாநிலங்களுக்கெல்லாம் உதாரணமாக தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

நெல்லை மாவட்டத்தில் கடந்த எந்த ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பருவமழை பொய்த்துவிட்டது. இதன் காரணமாக நெல், வாழை உள்ளிட்ட அனைத்து பயிர்களும் கருகிவிட்டது. இதன் காரணமாக விவசாயிகள் பெரும் துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். விவசாயத்தை நம்பி உள்ள விவசாயிகளும், பொதுமக்களும் பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். எனவே திருநெல்வேலி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

ஊழலின் ஊற்றுக்கண்ணாக கார்ப்பரேட் கம்பிகளின் கைக்கூலியாக செயல்பட்டு வருகின்ற ஒன்றிய பா.ஜ.க அரசை நாட்டை விட்டு விரட்டி இந்தியா கூட்டணி அமைத்திட முழு முயற்சி செய்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. இந்தியா கூட்டணிக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நீட் தேர்வால் அரியலூர் அனிதாவை தொடங்கி குரோம்பேட்டை மாணவர் ஜெகதீஸ்வரன் மட்டுமல்லாமல் அவருடைய தந்தையும் சேர்த்து பலியாகி உள்ளது, நீட் தேர்வால் ஏழை, எளிய, கிராமப்புற மாணவ செல்வங்களின் மருத்துவருக்கான கனவு சிதைந்து விட்டது. இவ்வாறு பிரச்சனைகள் நடக்கும் போது முதலமைச்சர் அவர்கள் நீட் தேர்வுக்கு ஆரம்பகாலத்தில் இருந்தே தன்னுடைய எதிர்ப்பினை பதிவு செய்துள்ளார். மேலும் நீட் தேர்வை ஒழிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். எந்த நீட் தேர்வை எதிர்த்தோமோ அந்த நீட்டுக்கான பலன் ஜீரோ தான். என்பதை ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

தற்போது முதுநிலை மருத்துவப் படிப்பில் சேர்வதற்கான நீட் தேர்வுக்கான மதிப்பெண் ஜீரோ பெற்றாலே போதும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படி என்றால் நீட் தேர்வு ஒரு கண்துடைப்பு நாடகம் என தெளிவாக தெரிகிறது. இதற்கு காரணமாக உள்ள ஒன்றிய அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 என்ற இலக்கை அடைவதற்கு பாக முகவர் கூட்டம் ராமநாதபுரத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. அதனை தொடர்ந்து நெல்லை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளின் பாக முகவர்கள் குழு( BLC)சரி பார்த்திட தலைமைக் கழகம் மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது. அந்தப் பணியினை ஓரிரு நாட்களுக்குள் முழுமையாக சரிபார்த்து தலைமை கழகத்திற்கு அனுப்பி விடும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் பணியாற்றிட வேண்டும் என்றும்.

நாடாளுமன்றத் தேர்தலில் முன்னிட்டு நாம் ஆற்றிட வேண்டிய பணிகள் குறித்து முதலமைச்சர் கழகத் தலைவர் முப்பெரும் விழாவில் விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள். மத்தியில் ஆளும் பா.ஜ.க.வை விரட்டிடும் வகையில் முன்னேற்பாடு பணிகளாக கிளை கழகங்கள், வார்டு கழகங்கள் வரை பாக முகவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து கலந்தாய்வு செய்வதற்காக ஒன்றிய, நகர, பேரூர்க் கழக கூட்டங்களை நடத்திட வேண்டும். என்றும். இக்கூட்டங்கள் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் உள்ள அனைத்து நிர்வாகிகள் பாக முகவர்கள் (BLA2) பாக முகவர்கள் குழு உறுப்பினர்கள் (BLC) தவறாமல் பங்கேற்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கொட்டும் மழையில் ராபின்சன் பூங்காவில் ஆரம்பித்த கழகம் வெற்றி நடைபோட்டு தமிழ்நாடு மக்களின் நலனை போற்றி வருகிறது திராவிட முன்னேற்ற கழகம் என்ற இயக்கம் மட்டும்தான் தமிழ்நாட்டு மக்களை காத்து வருகின்ற இயக்கமாக இருந்து வருகிறது. சிறப்புமிக்க கழகத்தின் பவள விழா ஆண்டாக இந்த ஆண்டு சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முப்பெரும் விழாவில் அறிவித்ததற்கு ஏற்ப பவள ஆண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் நூற்றாண்டு பொதுக் கூட்டங்கள், தெருமுனை பிரச்சாரங்களோடு கழகம் தோன்றிய 75 ஆண்டுகளான பவள விழா ஆண்டின் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்களுடைய உழைப்பினால் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுகளை நிறைவேற்றி விட இரவு, பகல், பாராது கண் துஞ்சாது தமிழக மக்கள் நலனே தமது நலன் மக்களின் மகிழ்ச்சியை தனது மகிழ்ச்சி என்ற உணர்வுடன் உழைத்து வருகின்ற நம் தலைவர் அவர்களால் தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், மகளிர், முதியோர், பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர், இளைஞர்கள் நாளும் நலத்திட்டங்களை பெற்று வருகிறார்கள் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியின் பண்புகளை போற்றி மகிழ்வார்கள். நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்மாதிரியாக தமிழ்நாட்டை மாற்றி தரும் நம்முடைய முதல்வர் என மகிழ்ச்சி அடைகிறார்கள். ஒன்றிய அரசுக்கு சாமரம் வீசும் அ.தி.மு.க.வின் அடிமை ஆட்சியினை காட்சியை மாற்றி சுயமரியாதை சுடரை பரப்பி திராவிட மாடல் ஆட்சியினை நடத்தி வரும் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்.

முதல்வர் அவர்களின் நல்லாட்சியில் வேளாண்மை துறை வளர்ச்சி வேளாண்மைக்கு 2 லட்சம் பேருக்கு இலவசமின்சார இணைப்பு, விவசாய கடன் தள்ளுபடி பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம் கல்லூரி மாணவிகளுக்கு மாதம் 1000ம் உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கு அடிப்படை தேவைகளான குடிநீர், போக்குவரத்து ஏற்ற சாலை வசதிகள், தரமான சுகாதார வசதி, மிகச் சிறந்த மருத்துவமனைகள், திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு, பள்ளி கல்வித்துறையில் வளர்ச்சி மற்றும் அனைத்து வழித்தடங்களுக்கும் போக்குவரத்து வசதிகள் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என பல்வேறு திட்டங்களால் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்த முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.